**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**நாள்: 01.08.2024 நேரம் : மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் வெண்கலப் பதக்கம் வென்றுள்ள இந்திய துப்பாக்கி சுடும் வீரர் **ஸ்வப்னீல் கவுசலே**-விற்கு, குடியரசுத் தலைவர் குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், வியட்நாம் பிரதமர் திரு. **ஃபாம் -மின் சின்ஹ்** உடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட **அத்தர்மலா** உள்ளிட்ட பகுதிகளில், மீட்புப் பணியாளர்கள், தேடுதல் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

நடப்பு நிதியாண்டிற்கான புதுச்சேரி அரசின் முழு பட்ஜெட்டை, நிதித்துறை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி, நாளை சட்டமன்றத்தில், தாக்கல் செய்கிறார்.

---------------------------

மோடி-கவுசலே (16)

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் ஆடவர் 50 மீட்டர் 3 position ரைஃபிள் பிரிவில், வெண்கலப் பதக்கம் வென்றுள்ள இந்திய துப்பாக்கி சுடும் வீரர் ஸ்வப்னீல் கவுசலே-விற்கு, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். இப்பிரிவில், பதக்கம்

வெல்லும் முதலாவது இந்தியராக திரு கவுசலே மேம்பட்டுள்ளதாக குடியரசுத் தலைவர், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் கூறியுள்ளார். ஒரே ஒலிம்பிக் போட்டியில், 3 துப்பாக்கி சுடும் பிரிவுகளில், இந்தியா பதக்கம் வெல்வது இதுவே முதல் முறை என்றும், அவர் தெரிவித்துள்ளார். கவுசலேயின் அர்ப்பணிப்பும்,விடா முயற்சியும், உலக அரங்கில் இந்தியாவை பெருமைப்படுத்தி இருப்பதாக, குடியரசுத் துணைத் தலைவர், தமது வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார். ஒலிம்பிக் பதக்கம், கவுசலே-வின் அபாரத் திறமைக்கு கிடைத்த பரிசு என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில், பிரதமர் திரு, நரேந்திர மோடி கூறியுள்ளார். சிறந்த திறன் மற்றும் நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய கவுசலே-யின் ஆட்டம் தனிச் சிறப்பு வாய்ந்தது என்றும், இப்பிரிவில் இந்தியா, பதக்கம் வெல்வது இதுவே முதல் முறை என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

---------------------------

*மோடி-வியட்நாம் 1 (18)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், வியட்நாம் பிரதமர் திரு. ஃபாம் -மின் சின்ஹ் உடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார். வியட்நாமின் நா த்ராங் பகுதியில் உள்ள தொலை தொடர்பு பல்கலைக் கழகத்தில், புதிதாக நிறுவப் பட்டுள்ள, ராணுவ மென்பொருள் பூங்காவை இரு தலைவர்களும் இணைந்து, மெய்நிகர் முறையில் திறந்து வைத்தனர். இந்தியாவிற்கும் , வியட்நாமிற்கும் இடையிலான ஒத்துழைப்புத் திட்டமாக, இந்தியாவின் 5 மில்லியன் டாலர் மானிய உதவியுடன், இத்திட்டம் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ளது. சுங்கவரித் துறையில் திறன் மேம்பாடு,

வேளாண் ஆராய்ச்சி, கல்வி, கடல்சார் பாரம்பரியம், மருத்துவத் தாவரங்கள் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு குறித்து, பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இன்றைய சந்திப்பின் போது பரிமாறிக் கொள்ளப்பட்டன. வானொலி மற்றும் தொலைக்காட்சித் துறையில் ஒத்துழைப்பது தொடர்பாக, பிரசார் பாரதிக்கும், வாய்ஸ் ஆப் வியட்நாம் ஒலிபரப்புக் கழகத்திற்கும் இடையே, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இந்தியாவிற்கும், வியட்நாமிற்கும் இடையிலான உறவுகளின் ஆழமும், அகலமும், கடந்த 10 ஆண்டுளில் நன்கு விரிவடைந்து இருப்பதாக, பிரதமர் திரு.நரேந்திர மோடி, செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். இருதரப்பு வர்த்தகம் 85 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாகவும், இருநாடுகளுக்கும்

மோடி-வியட்நாம் 2 (15)

பொதுவான பௌத்த பாரம்பரியம், இருநாட்டு மக்களை ஒருங்கிணைப்பதாகவும் அவர் கூறியுள்ளார். வியட்நாமிய இளைஞர்கள், இந்தியாவின் நாளந்தா பல்கலைக்கழகத்தால் பயன்பெற வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

2047ஆம் ஆண்டிற்குள் எட்ட வேண்டிய விக்சித் பாரத் இலக்குகளும், 2045ஆம் ஆண்டிற்கான வியட்நாமின் இலக்குகளும் இணைந்து, இருதரப்பு உறவுகளுக்கு வலுவூட்டி இருப்பதாகவும், தீவிரவாத எதிர்ப்பு, சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளிலும் ஒத்துழைப்பை நீட்டிக்க, இரு நாடுகளும் முடிவு செய்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். முன்னதாக, வியட்நாமிய பிரதமருக்கு இன்று காலை, புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையின் முன்

மைதானத்தில், சம்பிரதாய வரவேற்று அளிக்கப்பட்டது. தொடர்ந்து வியட்நாம் பிரதமர், ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி சமாதியில் மலரஞ்சலி செலுத்தினார். வியட்நாம் பிரதமர் திரு. சின்ஹ்,

இன்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் ஆகியோரையும் சந்திக்கிறார்.

---------------------------

வயநாடு 1 (11)

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில், நிலச்சரிவு ஏற்பட்ட இடங்களில ஒன்றான முண்டக்கை பகுதியில், மணல் குவியலில் சிக்கியவர்களில் உயிருடன் இருந்தவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு விட்டதாக, ராணுவ உயர் அதிகாரிகளை மேற்கோள் காட்டி, முதலமைச்சர் திரு. பினராய் விஜயன் தெரிவித்துள்ளார். ஆயினும், இன்றும் பலரை காணவில்லை என்றும், சிதைந்து போன உடல்கள் இடிபாடுகளுக்கு இடையில் புதைந்து இருக்கலாம் என்றும் கருதப்படுவதாக, அவர், இன்று பிற்பகல் வயநாட்டில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். சாலியாறு ஆற்றில் அடித்து செல்லப்பட்டதாக கருதப்படும் மேலும் பல உடல்களை மீட்க, முயற்சிகள் தொடரும் என்று, முதலமைச்சர் தெரிவித்தார். பாதிக்கப் பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், குழந்தைகளின் கல்வி பாதிக்காமல் பார்த்துக் கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். சம்பந்தப்பட்ட பகுதிகளில் தொற்று நோய் பரவாமல் தடுப்பதில், பொது மக்கள், சுகாதாரத் துறை அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கேரள அரசின் வருவாய், பொதுப்பணி, சுற்றுலா உட்பட பல்வேறு துறைகளின் அமைச்சர்கள் அடங்கிய, அமைச்சரவை துணைக் குழு, வயநாட்டில் முகாமிட்டு, நிவாரணப் பணிகளை ஒருங்கிணைக்கும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். மணல் சரிவில்

வயநாடு 2 (18)

இழக்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் இதர ஆவணங்கள், மீண்டும் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். முன்னதாக, கேரள முதலமைச்சர், மணல் சரிவின் நிலவரங்கள் குறித்து அனைத்துக் கட்சி கூட்டம் ஒன்றையும், உயர் அதிகாரிகளின் கூட்டம் ஒன்றையும் நடத்தினார். இதற்கிடையே, மக்களவை எதிர்கட்சித் தலைவரும், திரு. ராகுல்காந்தி, இன்று பிற்பகல், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட சூரல் மலைப் பகுதிக்கு சென்று சேர்ந்துள்ளார். திருமதி பிரியங்கா காந்தி உட்பட இதர காங்கிரஸ் தலைவர்களும் உடன் சென்றுள்ளனர்.

வயநாடு மாவட்டத்தில், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட அத்தமலா உள்ளிட்ட பகுதிகளில், மீட்புப் பணியாளர்கள் தேடுதல் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். நிலச்சரிவு தொடங்கியதாக கருதப்படும் வஞ்சிரவட்டம் பகுதியிலும், மணல் குவியலில் புதையுண்டு கிடப்பவர்களை கண்டுபிடிக்க, மோப்ப நாய்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நிலச்சரிவில் 260 பேர் பலியானதாகவும், இதில் இதுவரை 99 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டு உள்ளதாகவும் காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து, சிதைந்த நிலையில் 86

பேரின் உடல்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. சூரல் மலைப் பகுதியில், சிற்றுாறு ஒன்றின் குறுக்கே உடனடி பாலம் ஒன்றை அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

---------------------------

*சட்டமன்றம் 1 (18)*

புதுச்சேரி சட்டமன்றத்தில், நேற்று துணை நிலை ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்கள் இன்று இடம்பெற்றன. திமுக உறுப்பினர் திரு. சம்பத் விவாதங்களில் பேசுகையில், ஆளும் கட்சியினர், எதிர்கட்சிகளிடம் ஆலோசனைப் பெற்று ஆட்சி நடத்த வேண்டும் என்றார். சுயேட்சை உறுப்பினர் திரு. அங்காளன் அவையில் பேசுகையில், ஆளுநர் உரையில் வளர்ச்சிக்கான பெரிய திட்டங்கள் எதுவும் இல்லை என்றார். பல்வேறு துறையில் திட்டங்கள் போட்டாலும் போதிய நிதி இல்லை என்று அவர் தெரிவித்தார். சிவப்பு ரேஷன் அட்டை வழங்கப்பட்டதில், முறைகேடுகள் நடந்து இருப்பதால், புதிதாக 75 ஆயிரம் குடும்பங்களுக்கு ரேஷன் அட்டை வழங்கினாலும் பயன் இராது என்று அவர் கூறினார். முறைகேடுகள் நடைபெறவில்லை என்று அமைச்சர் திரு. சாய் சரவணன் குமார் பதிலளித்த போதிலும், திரு. நேரு உள்ளிட்ட சுயேட்சை எம்எல்ஏக்கள் இதை மறுத்ததால், அவையில் சிறிது நேரம் கார சார விவாதம் ஏற்பட்டது. பிரச்சனை குறித்து ஆய்வு நடப்பதாகவும், தவறு உறுதியானால், முதலமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்றும், பேரவைத் தலைவர் திரு. செல்வம் குறிப்பிட்டதை தொடர்ந்து விவாதம் முடிவிற்கு வந்தது. திரு.

அங்காளன் தொடர்நது பேசுகையில், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில், விவசாயிகள் அல்லாதவர்களுக்கு கடன் வழங்கப் பட்டுள்ளதாக



குற்றம் சாட்டினார். மின் கட்டண உயர்வு, மற்றும், மின்துறை தனியார்மய முயற்சியை அவர் ஆட்சேபித்தார். தொடர்ந்து பிஜேபி உறுப்பினர் திரு. அசோக்பாபு பேசுகையில், மத்திய அரசு மூலம் புதுவையில் அமலாகி வரும் திட்டங்கள் மற்றும் திட்டப் பயனாளிகள் குறித்த விவரங்களை எடுத்துக் கூறினார். மக்கள் மருந்தகம், விவசாயிகளுக்கான உரக்கடை, மற்றும், பிரதமரின் மீன்வளத் திட்டம் குறித்து, பாரதீய ஜனதாக் கட்சியினர் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். திமுக உறுப்பினர் திரு. நாஜிம் அப்போது குறுக்கிட்டு, ஆயுஷ்மான் பாரத் திட்டம் குறித்து அரை மணி நேரம் விவாதிக்க தயாரா என வினவினார். படித்த இளைஞர்களுக்கு வங்கிக் கடன் கிடைப்பதில்லை என்று, எதிர்கட்சித் தலைவர் திரு. சிவா குற்றம் சாட்டினார். கடந்த ஆட்சியில், கடன் வழங்கப் பெற்றவர்கள், திருப்பி செலுத்தவில்லை என்றும், கடனை வசூலிக்க முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்றும் பேரவைத் தலைவர் திரு. செல்வம் தெரிவித்தார். மக்களுக்கு கடன் கொடுப்பது அரசின் கடமை என்று, திமுக உறுப்பினர் திரு. நாஜிம் கூறினார். திமுக உறுப்பினர்கள், அரசிடம் இருந்து நிதி பெற்று, அதை தாங்களே செய்வது போல் காட்டிக் கொள்வதாக, உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம் குறிப்பிட்டார். தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் திரு. ராமலிங்கம், புதுச்சேரியில் முதலமைச்சர் திரு. ரங்கசாமி அமல்படுத்தி உள்ள

*சட்டமன்றம் 3 (16)*

திட்டங்கள் குறித்து எடுத்துக் கூறினார். தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கு சிலை அமைப்பது குறித்து, எதிர்கட்சித் தலைவர் திரு. சிவா பேசிய போது, சபாநாயகர் இதுபற்றிய நீதிமன்ற உத்தரவை சுட்டிக் காட்டினார். நீதிமன்ற உத்தரவின்படி, சாலைகளின் நடுப்பகுதியில்தான் சிலை வைக்கக் கூடாது என்று, திரு. சிவா தெரிவித்தார். புதுச்சேரியில் மூடப்பட்டுள்ள அரசு நிறுவனங்களை திறக்கவும், விமான நிலைய விரிவாக்கம் போன்ற திட்டங்களுக்கும், மத்திய அரசிடம் அனுமதி கேட்டுப் பெற வேண்டும் என வலியுறுத்தினார். புதுச்சேரியில் கடந்த காங்கிரஸ்-திமுக ஆட்சியில்தான் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டதாக சபாநாயகர் திரு. செல்வம் கூறினார். பாப்ஸ்கோ, பாசிக் ஊழியர்களின் எதிர்காலம் என்ன என்று திமுக உறுப்பினர் திரு. நாஜிம் கேட்ட போது, பாப்ஸ்கோ ஊழியர்களுக்கு செய்ய வேண்டியது குறித்து, முதலமைச்சர் சட்டமன்றத்தில் அறிவிப்பார் என, சபாநாயகர் பதில் அளித்தார். இதை தொடர்ந்து புதுச்சேரி சட்டமன்றத்தின் இன்றைய அலுவல்கள் முடிவிற்கு வந்தன. நிதித்துறை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி, நாளைக் காலை 9 மணிக்கு, நடப்பு நிதியாண்டிற்கான புதுச்சேரி அரசின் முழு பட்ஜெட்டை தாக்கல் செய்கிறார்.

---------------------------

*சுற்றுலா (10)*

சுற்றுலா மேம்பாட்டுக் குறியீடு குறித்து உலக பொருளாதார பேரவையால் தயாரிக்கப் பட்டுள்ள, 119 நாடுகளுக்கான தர வரிசைப் பட்டியலில் இந்தியா, 39ஆவது இடம் பிடித்துள்ளது. 2002ஆம் ஆண்டில், 14.3

மில்லியன் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வந்ததாகவும், உலக அளவிலான எண்ணிக்கையில் இது, 1.47 சதவிகிதம் என்றும், மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் செகாவத், இன்று மாநிலங்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். சுற்றுலாத் துறைக்கு அளிக்கப்படும் முன்னுரிமை, சுகாதாரம்-துப்புரவு, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு ஆகிய 3 துறைகளில், இந்தியாவின் மதிப்பெண்கள் அதிகரித்து இருப்பதாக அவர் கூறினார்.

---------------------------

வானிலை (9)

நீலகிரி மாவட்டத்திலும், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகளிலும் இன்று ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், மணிக்கு 30 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் வலுவான தரைக்காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 7ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், நீலகிரி மாவட்டம் வின்ட் வொர்த் எஸ்டேட் பகுதியில், அதிகபட்சமாக 7 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

---------------------------

காப்பீடு (15)

நாட்டில், சுமார் 13ஆயிரம் விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், மற்றும், உதவிப் பணியாளர்கள், இந்திய விளையாட்டு ஆணையத்தின்

பல்வேறு சிறப்பு மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்களின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளனர். இதன்மூலம், விளையாட்டு தொடர்பான காயங்கள் மற்றும் உடல்நலக் குறைவுகளுக்கு 5 லட்சம் ரூபாய் வரையிலான காப்பீட்டுத் தொகை கிடைக்கும் என்றும், விபத்து அல்லது மோசமான காயங்களால் மரணம் ஏற்பட்டால், கூடுதலாக 25 லட்சம் ரூபாய் கிடைக்கும் என்றும், மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இன்று, மாநிலங்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். விளையாட்டு வீரர் நலவாழ்விற்கான பண்டிட் தீன் தயாள் உபாத்யாயா தேசிய திட்டத்தின் கீழ், விளையாட்டு வீரர்கள் மற்றும் அவர்களின் குடுமபத்தினருக்கு, 10 லட்சம் ரூபாய் வரை, மருத்தவ செலவிற்கான உதவி வழங்கபடுவதாக அவர் கூறினார். இது அல்லாது, பயிற்சி அல்லது போட்டிகளின் போது காயமடையும் விளையாட்டு வீரர்களுக்கு, 10 லட்சம் ரூபாய் வரை உதவி வழங்கப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

---------------------------

இலங்கை (14)

இந்திய மீன்பிடி படகு ஒன்று, இலங்கை கடற்படை கப்பலுடன் மோதியதில் இந்திய மீனவர் ஒருவர் உயிரிழந்தது தொடர்பாக, வெளியுறவு அமைச்சகம் இன்று புதுடெல்லியில் உள்ள இலங்கை அரசின் பொறுப்புத் தூதரை நேரில் அழைத்து, இந்தியாவின் வலுவான கண்டனத்தை பதிவு செய்தது. கொழும்புவில் உள்ள இந்திய தூதரும், இலங்கை அரசிடம் இது குறித்து பேசுவார் என வெளியறவு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மீனவர் பிரச்சனையை, மனித நேயத்தின் அடிப்படையில், தற்போதுள்ள

ஒப்பந்தங்களுக்கு ஏற்ற முறையில் அணுக வேண்டும் என்பதையே, இந்தியா எப்போதும் வலியுறுத்தி வந்திருப்பதாகவும், இப்பிரச்சனையில், படை பலத்தின் பயன்பாட்டை முற்றிலும் தவிர்க்க வேண்டியது அவசியம் என்றும், வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது. யாழ்பாணத்தில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள், காங்கேசன் துறைக்கு விரைந்து, பாதிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு இயன்ற எல்லா உதவிகளையும் வழங்க அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் வெண்கலப் பதக்கம் வென்றுள்ள இந்திய துப்பாக்கி சுடும் வீரர் **ஸ்வப்னீல் கவுசலே**-விற்கு, குடியரசுத் தலைவர் குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், வியட்நாம் பிரதமர் திரு. **ஃபாம் -மின் சின்ஹ்** உடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட **அத்தமலா** உள்ளிட்ட பகுதிகளில், மீட்புப் பணியாளர்கள், தேடுதல் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

நடப்பு நிதியாண்டிற்கான புதுச்சேரி அரசின் முழு பட்ஜெட்டை, நிதித்துறை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி, நாளை சட்டமன்றத்தில், தாக்கல் செய்கிறார்.